# <u>சேலம் மாநகராட்சி</u>

**2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் மாநகராட்சி சட்டம் அட்டவணை 1, பத்தி 3(1)ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

## <u>பொருள்கள்</u>

**1)** நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.18697/2022/CFC-1, நாள்.14.10.2022–ம் தேதி செயல்முறையின்படி, 2022–2023ம் ஆண்டு 15–வது மத்திய நிதிக் குழு பரிந்துரையின் பேரில் C.F.C. (Central Finance Commission) Tied Grant–ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் நகராட்சி நிர்வாக இயக்குநரத்தின் மூலம் LED தெருவிளக்குகள் கொள்முதல் செய்ய இறுதி செய்யப்பட்ட விலை மற்றும் விவரக் குறிப்பு (Specifications) கூட்ட நடவடிக்கை நாள்.25.04.2022ம் தேதிய நிகழ்வு குறிப்பின் படி இறுதி செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதங்களின்படி 15வது நிதிக்குழு மானியம் 2022–2023 Tied Grant–ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தெருவிளக்குகளை (இணைப்பில் இணைக்கப்படுள்ளவாறு) கொள்ளுதல் செய்து கொள்ள சேலம் மாநகராட்சிக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

**நிபந்தனைகள் :**

1. தொழில்நுட்ப அனுமதி தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000ஐ பின்பற்றி தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
2. தொழில்நுட்ப குழுவினரால் அனுமதியளிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட விலை மற்றும் விவரக்குறிப்பின்படி (Specifications) LED தெருவிளக்குகள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும்ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000ஐ பின்பற்றி தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
3. கொள்முதல் செய்ய வேண்டிய LED தெருவிளக்குகள் விலை மற்றும் விவரக்குறிப்பு (Specifications) இவ்வலுவலக சுற்றறிக்கை எண்.45490/2012/DO1, நாள்.11.05.2022ல் தெரிவித்துள்ளவாறு இருக்க வேண்டும்.
4. LED தெருவிளக்குகள் கொள்முதல் செய்யப்பட்டு பொருத்தப்பட்ட விவரங்கள் மின்கம்பங்கள் வாரியாக முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

தொடர்ச்சி..

விலைவிகிதம் :

| Sl. No. | Name of the ULB | Name of The Work | No. of Lights | Rate (Per. Unit) | Amount Rs. | Estimate Amount (Rs.in Lakhs) | Fund allocated Under 15th CFC 2022-23 (Rs.in Lakhs) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Salem Corporation | a). LED Street light Fitting with octagonal pole alone | | | | | |
| | | i,90W, LED with dimmable driver | 419 | 11950 | 5007050 | 432.50 | 432.50 |
| | | Octagonal pole cost | | | 11410000 | | |
| | | Cost of cable & labour charges | | | 14600000 | | |
| | | Fondation Cost | | | 4580000 | | |
| | | base cost | | | 35597050 | | |
| | | GST (18%) | | | 6407469 | | |
| | | LWF (%) | | | 355971 | | |
| | | LS | | | 889926 | | |
| | | **Total** | | | **43250416** | | |

| Sl. No. | Name of the ULB | Name of The Work | No. of Lights | Rate (Per. Unit) | Amount Rs. | Estimate Amount (Rs.in Lakhs) | Fund allocated Under 15th CFC 2022-23 (Rs.in Lakhs) |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | Salem Corporation | a). LED Street light Fitting with octagonal pole alone | | | | | |
| | | i,90W, LED with dimmable driver | 381 | 11950 | 4552950 | | |
| | | Octagonal pole cost | | | 10490000 | 395.40 | 395.40 |
| | | Cost of cable & labour charges | | | 13280000 | | |
| | | Fondation Cost | | | 4220000 | | |
| | | base cost | | | 32542950 | | |
| | | GST (18%) | | | 5857731 | | |
| | | LWF (%) | | | 325430 | | |
| | | LS | | | 813574 | | |
| | | **Total** | | | **39539684** | | |

மேற்படி LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரத்தின் தொழில் நுட்ப அனுமதி பெறவும், ஒப்பந்தப்புள்ளி கோர பணியிை நிறைவேற்றவும், பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றம் பின்னேற்பு வழங்கி அங்கீகரிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :–**

மன்றம் பின்னேற்ப்பு வழங்கி அங்கீகரிக்கலாம்.

**(இ7/1734/2021)**

தீர்மானம்: அங்கீகரிக்கப்பட்டது.

2) <u>4வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி சே.மகேஸ்வரி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 4வது கோட்டத்திற்கு உட்பட்ட அழகாபுரம் காந்திநகரில் 300 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகிறார்கள். மேற்படி காந்தி நகருக்கு சாக்கடை வசதி மற்றும் தார்சாலை வசதி நீண்ட காலமாக இல்லாமல் உள்ளது. இதனால் மேற்கண்ட பகுதி பொதுமக்கள் சென்று வரவும் மற்றும் கழிவுநீர் தேங்கி நோய்கள் பரவி மிகவும் பாதிப்படைந்து கஷ்டப்பட்டு வருகிறார்கள். எனவே மேற்கண்ட காந்திநகருக்கு சாக்கடை வசதி மற்றும் தார்சாலை வசதி அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

3) <u>4வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி சே.மகேஸ்வரி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 4வது கோட்டத்திற்கு உட்பட்ட அழகாபுரம் ஆறுமுகநகர், சேரன்தெரு, சோழன் தெரு, பாண்டியன் தெருவில் சுமார் 500 முதல் 700 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகிறார்கள். மேற்படி தெருக்களில் உள்ள கழிவுநீர் செல்லும் சாக்கடை கால்வாய் மிகவும் பாதிப்படைந்து கழிவுநீர் சாலைகளில் ஆங்காங்கே தேங்கியுள்ளது. கழிவுநீர் தேக்கத்தால் கொசுக்கள் உற்பத்தி ஆகி பொதுமக்கள், வயதானவர்கள், குழந்தைகள் அடிக்கடி காய்ச்சல் மற்றும் வியாதிகளால் பாதிப்படைந்து வருகிறார்கள். சாலைகள் மிகவும் சேதமடைந்து பள்ளமாக உள்ளது. இதனால் மக்கள் வெளியே சென்று வர மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். எனவே, மேற்கண்ட ஆறுமுகநகர், சேரன்தெரு, சோழன்தெரு, பாண்டியன் தெருவிற்கு சாக்கடை வசதி மற்றும் தார்சாலை வசதி அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

4) <u>10வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி ரா. சாந்தி அவர்களின் தீர்மானம்</u>

10வது கோட்டத்தில் கீழ்க்கண்ட மண்சாலையாக உள்ள சாலைகளை தார்சாலையாக மாற்றி சாக்கடை கால்வாய் அமைக்கவேண்டிய இடங்கள்.

1. ராஜகணபதி கோவில் 3
2. ராஜகணபதி கோவில் 4
3. ராஜகணபதி கோவில் குறுக்கு தெரு
4. சக்திநகர் (குமரன்நகர் பகுதி)
5. குமரன்நகர் (கருப்பனார் கோவில்)

சாக்கடை கால்வாய் அமைக்க வேண்டிய இடங்கள்

1. ஸ்ரீராம்நகர்
2. செங்கல் அணை பகுதி (மாரியம்மன் கோவில்)
3. ராஜகணபதி கோவில் 2வது தெரு
4. இரட்டை கிணறு
5. கருப்பனார் கோவில் பகுதி

தார்சாலை அமைக்க வேண்டிய இடங்கள்

1. அங்காளம்மன் கோவில் தெரு
2. தாண்டவன் நகர் 2, 3வது தெரு
3. சக்திநகர் குறுக்கு தெரு.

சாக்கடை கால்வாய் மற்றும் தார்சாலை அமைக்க வேண்டிய இடங்கள்

1. வன்னியர் வடக்கு தெரு 5
2. அண்ணாநகர் 1,2 மற்றும் 3வது தெருக்கள்
3. சின்னமுத்து தெரு
4. தாண்டவன் நகர் 2, 3 மற்றும் 4வது தெருக்கள்
5. கோபால் தெரு
6. புது காலனி

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தெருக்களில் பல காலமாக சாக்கடை கால்வாய் மற்றும் தார்சாலைகள் இல்லாமலும், இப்பொழுது இருக்கும் சாலைகள் மற்றும் கால்வாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் தினந்தோறும் சிரமப்படுகிறார்கள். எனவே, இப்பகுதிகளில் சாக்கடை கால்வாய் மற்றும் தார்சாலை அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

5) <u>10வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி ரா. சாந்தி அவர்களின் தீர்மானம்</u>

10வது கோட்டத்தில் கீழ்க்கண்ட தெருக்களில் ஆழ்துளை கிணறுகள் சரிசெய்யவேண்டிய இடங்கள்.

1. அண்ணாநகர் 4வது தெரு – டேங்க் அடிபீடம் அமைத்து போரில் இருந்து டேங்கிற்கு பைப் இணைப்பு கொடுத்தல்.
2. அண்ணாநகர் 4வது (குறுக்கு தெரு–1) டேங்க் அடிபீடம் மற்றும் மோட்டார் ரூம் அமைத்து போரில் இருந்து டேங்க்கிற்கு பைப் இணைப்பு கொடுத்தல்.
3. அண்ணாநகர் 4வது (குறுக்கு தெரு–2) பழுதடைந்த நீர்மூழ்கி மோட்டாரை சரிசெய்து டேங்க் அடிபீடம் மற்றும் மோட்டார் ரூம் அமைத்து போரில் இருந்து டேங்கிற்கு பைப் இணைப்பு கொடுத்தல்.
4. தாண்டவன் நகர் 1வது தெரு – பழுதடைந்த நீர்முழ்கி மோட்டாரை சரிசெய்து டேங்க் அடிபீடம் மற்றும் மோட்டார் ரூம் அமைத்து போரில் இருந்து டேங்கிற்கு பைப் இணைப்பு கொடுத்தல்.
5. பெருமாள் கோவில் தெரு – பழுதடைந்த நீர்மூழ்கி மோட்டாரை சரிசெய்து டேங்க் அடிபீடம் மற்றும் மோட்டார் ரூம் அமைத்து போரில் இருந்து டேங்கிற்கு பைப் இணைப்பு கொடுத்தல்.
6. ராஜகணபதி தெரு – இடிந்து விழும் நிலையில் உள்ள டேங்க் அடிபீடம் மற்றும் மோட்டார் ரூமை அகற்றிவிட்டு அதே இடத்தில் புதியதாக அமைத்து போரில் இருந்து டேங்கிற்கு பைப் லைன் இணைப்பு கொடுத்தல்.
7. சக்திநகர் – இடிந்து விழும் நிலையில் உள்ள மோட்டார் ரூமை அகற்றிவிட்டு அதே இடத்தில் புதியதாக அமைத்து போரில் இருந்து டேங்கிற்கு பைப் லைன் இணைப்பு கொடுத்தல்.
8. செங்கல் அணை – பழுதடைந்த நீர்மூழ்கி மோட்டாரை சரிசெய்து, மேலும் ஒரு டேங்க் அமைத்து போரில் இருந்து டேங்கிற்கு பைப் லைன் இணைப்பு கொடுத்தல்.

<u>புதியதாக தெருவிளக்கு அமைக்க வேண்டிய இடங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | சீலாவரி ஹவுசிங் போர்டு குடியிருப்பு பகுதி | – | 15 |
| 2. | ராஜகணபதி கோவில் தெரு | – | 10 |
| 3. | சக்திநகர் | – | 8 |
| 4. | சரஸ்வதி நகர் | – | 4 |
| 5. | தாண்டவன் நகர் | – | 5 |
| 6. | செங்கல்அணை | – | 5 |
| 7. | தேசிய புணரமைப்பு காலனி | – | 3 |

மேற்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

6) <u>23வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி அ. சிவகாமி அவர்களின் தீர்மானம்</u>

23வது கோட்டத்தில்

1. கண்ணகிதெரு, திருவாக்கவுண்டனூர் மெயின் சாலையான மாரியம்மன் கோவிலிருந்து பொதுக்கழிப்பிடம் வரையிலான புதிதாக தார்சாலை, அருளப்பர் லைன் மற்றும் பக்கத்து தெருவில் கான்கிரீட் சாலை, மாரியம்மன் கோவில் பின்புறம் முதல் நடுவட்டம் வரையில் புதிதாக சாக்கடை வசதி செய்தல்.
2. மிட்லேண்ட்நகர், காந்தி ஆசிரமம், பொதுக்கழிப்பிடம், தூளியம்மன் கோவில், கலர்காடு வரையிலான சாலை இருபுறங்களிலும் புதிதாக சாக்கடை (Drinage) வசதி செய்து, காந்தி ஆசிரமம் முதல் குறுக்கு சந்து தார்சாலை மற்றும் பொதுக்கழிப்பிடம் 2வது சந்து சிமெண்ட் சாலை அமைத்தல்.
   கலர்காடு, இப்பகுதியில் சாக்கடை நீர் சாலைகளில் செல்வதால் போக்குவரத்துக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அவசிய தேவையாக கல்வெட்டு அமைத்தல்.

தொடர்ச்சி

3. மேத்தாநகரில், சாலை அமைக்க பொதுமக்கள் 10 வருடங்களாக போராடி வருகின்றனர். எனவே, இங்கு முதல் தெரு, இரண்டாம் தெரு மற்றும் பைபாஸ் அருகில் உள்ள வலதுபுற சர்வீஸ் ரோடு புதிதாக தார்சாலை மற்றும் அதன் 4 குறுக்கு சாலைகளிலும் தார்சாலை அமைத்தல்.
4. மாரியம்மன் கோவில் வலது பக்கம் தமிழ்நகர் வரையில் தார்சாலை மற்றும் இடதுபுறம் சாக்கடை (Drinage) வசதி, அதன்குறுக்கு சந்து முதல் சந்து (50m) மற்றும் இரண்டும் சந்து (50m) சிமெண்ட் சாலை மாரியம்மன் கோவில் அருகில் புத்தர் தெரு மலர் இல்லம் லைன், கான்கிரீட் சாலை அமைத்தல்.
5. சுகுமார் காலனியில் நீண்டகாலமாக சாக்கடை வசதி இல்லாமல் அப்பகுதி மக்கள் தவித்து வருகின்றனர். எனவே, இங்கு புதிதாக சாக்கடை (Drinage) வசதி செய்தல்.

மேற்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

7) <u>23வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி அ. சிவகாமி அவர்களின் தீர்மானம்</u>

23வது கோட்டம், போடிநாயக்கன்பட்டி கிராமம், திருவாக்கவுண்டனூர் பகுதியில் சுமார் 4000 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்களுக்கு மயானம் இல்லாததால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். போடிநாயக்கன்பட்டி கிராமத்தில் மயானம் அமைப்பதற்காகவே 60 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, மேற்படி பகுதி மக்களுக்கு மயானம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

8) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 37வது கோட்டம் பகுதியில் உள்ள நடுநிலைப்பள்ளி கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், பழுதடைந்து உள்ள கட்டிடத்தை அப்புறப்படுத்தி புதியதாக வகுப்பறைகள் கட்ட இருப்பதால், பழுதடைந்து உள்ள கட்டிடத்தை (மேற்கு புறம் உள்ள) இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டவும் பழுதடைந்து உள்ள பள்ளிக்கட்டிடம் இடிக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

9) <u>46வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி ஜெ.மோகனப்பிரியா அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 46வது கோட்டத்திற்குட்பட்ட சாக்கடை கால்வாய்கள் அனைத்தும் அடைப்பு உள்ளதால் அனைத்து கால்வாய்களையும் தூர் வாரவும்,

மேலும் வடகிழக்கு பருவமழை காரணமாக மழைநீர் வீட்டிற்குள் செல்லாமல் இருக்க பெரிய கால்வாய்கள் அனைத்தையும் தூர்வாருதல்.

மேற்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

10) <u>46வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி ஜெ.மோகனப்பிரியா அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 46வது கோட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி துவக்கப்பள்ளியில் 138 குழந்தைகள் பயில்கின்றனர். சாமுண்டி தெருவில் இப்பள்ளி உள்ளது. வகுப்பு அறை அருகே சமையல் அறை உள்ளது. (GAS மூலம் சமைகின்றனர்) இதனால் அச்சமாக உள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பு கருதி தலைமை ஆசிரியரின் கோரிக்கையின்படி, மேற்படி பள்ளிக்கு சமையல் அறை மற்றும் கூடுதல் இரண்டு வகுப்புகள் அறைகள் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

11) <u>51வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.பி.எல்.பழனிசாமி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 51வது கோட்டத்திற்குட்பட்ட சாலை, சாக்கடை மிகவும் மோசமாக பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. 51வது கோட்டத்தில் 100 அடி, 150 அடி என்று பல சாலை ரோடுகள் உள்ளது. அதையெல்லாம் தார்ரோடு, கான்கிரீட் ரோடாக மாற்றுதல்.

மணியனூர் பகுதியில் பெரிய பார்க் உள்ளது. அது பராமரிப்பு இல்லாமலும், பொதுமக்கள் பயன்படுத்த முடியாத வகையிலும் உள்ளது. அங்கு மாலையில் குடும்பமாக வந்து பார்க்கில் அமர்ந்து சென்று செல்கிறார்கள். இந்த பார்க்கை சரியாக பராமரித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு செய்து கொடுத்தல்.

பார்க்கில் உள்ள மின்விளக்குகளும், வயர், லைன் பழுதடைந்து செயல்படாத நிலையில் உள்ளது. அதையும் சரிசெய்தல்.

மணியனூர் பகுதியில் சாலை வசதி, கழிவுநீர் கால்வாய் வசதி செய்தல்.

மேற்படி பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: தீர்மானம் நிறைவேறியது.

**12)** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், அரசுத் தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ/மாணவியருக்கு பள்ளி வேலை நாட்களில் காலை உணவு முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்டு, அரசாணை (நிலை) எண்.43 சமுகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை நாள்27.07.2022 உத்திரவின்படி 15.09.2022 முதல் இத்திட்டம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட 54 பள்ளிகளுக்கு முதற்கட்டமாக காலை உணவு விநியோகஸ்தர்களுக்கு ஒரு பள்ளிக்கு 1 நபருக்கு வீதம் 100 எண்ணிக்கைக்கு மாதம் ரூ.1,500/–ஐ கௌரவ ஊதியம் (Honorarium), கல்வி மற்றும் வருவாய் நிதியிலிருந்து வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 17404/2022 மநஅ2, நாள்.02.11.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மாநகராட்சிக்கு உட்பட்ட 54 பள்ளிகளுக்கு காலை உணவு பரிமாறுவதற்கு ஒரு பள்ளிக்கு 1 நபருக்கு வீதம் 100 எண்ணிக்கைக்கு, 80 நபருக்கு மிகாமல் மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/– கௌரவ ஊதியம் (Honorarium) (80 x ரூ.1500/–) தொகையினை கல்வி நிதி மற்றும் வருவாய் நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தலைமை ஆசிரியர் மூலமாக வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அனுமதிக்கலாம்.

**(சி1/15027/2022)**

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
25–11–2022.